**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 09-02-2024**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-09 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-10 | 2024-02-11 | 2024-02-12 | 2024-02-13 | 2024-02-14 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 34.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 23.0 | 23.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 100 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 30 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 14 | 18 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 1 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்பநிலை 34.0°C -35.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 22.0°C -23.0°C வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஓரளவு மேகமூட்டமான வானம் எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகம் மணிக்கு 14 - 18 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

நிகழும் வானிலையின் காரணமாக கறவை மாடுகளில் மடிவீக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால். பால் கற்கும் முன்பும், பின்பும் 1 சதவீதம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவி சுத்தம் செய்யவும்.

## குறுஞ்செய்தி :

தோட்டக்கலை பயிர்களுக்கு தேவைக்கேற்ப பாத்திகளில் களை எடுத்தால், மண் அணைத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உளுந்து | தற்போது நிலவும் வானிலை காரணமாக பாசிப்பயிறு, உளுந்து பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் தென்படுகிறது. எனவே, விவசாயிகள் இவற்றை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 0.5 மில்லி இமிடாகுளோர்பிட் என்ற பூச்சிச்க்கொக்ல்லி மருந்தினை தெளிக்கவும். மேலும், ஒரு ஏக்கருக்கு 5 மஞ்சள் ஒட்டும் பொறி வைத்துத் மஞ்சள் தேமல் நோயை உருவாக்கும் பூச்சிச் களை கட்டுட்ப்படுத்தலாம். |
| நிலக்கடலை | எண்ணெய் வித்துக்கள் மகசூலை அதிகரிக்கும் சாகுபடி வளர்ச்சி ஆலோசனைகள்: நில்கடலையின் விதை பிடிப்பை மற்றும் விதை மகசூலை உயர்த்த மெப்பிக்குவேட் குளோரைடு, 125 பிபிஎம் இலைவழி தெளிப்பாக உபயோகிக்கலாம். பூர்க்கும் பருவத்திலும், காய்பிடிக்கும் பருவத்திலும் சாலிசிலிக் அமிலத்தை 100 பிபிபஎம் இலைவழி தெளிப்பாக தெளித்தால் காய்பிடிக்கும் திறனையும் மகசூலையும் அதிகரிக்கும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாயில் மஞ்சள் முரனைச் சிலந்தி பாதிப்பின் காரணமாக இலைகள் கீழ்நோக்கி சுருங்கி சுருண்டுவிடும், இலைக்காம்புகள் நீண்டுகாணப்படும், இதனால் செடியின் வளர்ச்சி குன்றிவிடும். இதனை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்சோயேட் குருணை 0.4 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | ஆடு மாடுகளில் நத்தைகள் மூலம் பரவும் தட்டைப்புழு நோய்களை கட்டுப்படுத்துத்தல்: தை , மாசி மற்றும் பங்குனி மாதங்களில் நீர் நிர்லைகள் உள்ள பகுதிகளுக்கு மேயச் செல்லும் ஆடு மாடுகளுக்கு (குறிப்பாக இளம் கால்நடைகள்) நத்தைகள் மூலம் பரவும் தட்டைப்புழுக்களின் தாக்கம் காணப்படும். பாதிக்கப்பட்ட கால்நடைகளில் கழிச்சல், இரத்த சோகை , கீழ்த்தாடை வீக்வீகம், அடிக்கடி தண்ணீர்ணீகுடித்தல் மற்றும் மாடுகளில் வயிறு உப்புசம் போன்ற அறிகுறிகள் காணப்படும். தட்டைப்புழுக்களின் தாக்கத்தை கண்டறிய சாணப் பரிசோதனை செய்து, கால்நடை மருத்துத்வரின் ஆலோசனைப்படி குடற்புழு நீக்கம் செய்யலாம். மேலும் இப்புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த கால்நடைகளை நீர் நிலைகளுள்ள பகுதிகளுக்கு மேய்ச்சச்லுக்கு அனுப்பக்கூடாது. |
| பசு | கோடைகாலம் துவங்க உள்ளதால் பகல் மற்றும் இரவு வெப்பநிலைகளில் மாற்றம் காணப்படுகிறது. இதனால் முட்டையிடும் கோழிகளில் தீவன எடுப்பு வெப்ப அயற்சி காரணமாக குறையும். மேலும் வெப்ப அதிர்ச்சி காரணமாக கோழிகள் இறக்க நேரிடும். ஆரம்ப கால கோடைகாலத்தை சமாளிக்கவும், வெப்ப தாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கவும் பகல் வேளையில் மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை தீவனம் அளிக்ககூடாது. |